மாகாண கல்வித்திணைக்களம்
வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

மூன்றாம் தவணைப் பரீட்சை - 2025

தரம் - 10	தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் - I,II	நேரம்: 3 மணித்தியாலங்கள்

பெயர் / சுட்டெண்: ....

மேலதிக வாசிப்பு நேரம் : 10 நிமிடம்

கவனிக்க:

* **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
* **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
* **உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

பகுதி - I

01) பின்வருவனவற்றுள் தொகுதி ஒன்றின் கூறு **அல்லாதது**?

1. உள்ளீடு
2. முறைவழியாக்கம்
3. வன்பொருள்
4. வெளியீடு

02) பின்வருவனவற்றுள் கல்வித்துறையில் தகவல் தொடர்பான தொழில்நுட்ப துறையின் பங்களிப்பு எது?

1. MICR
2. MRI
3. LMS
4. RFID

03) விமல் ஒரு பாடலைக் கேட்டு அதனை கனிணியில் தட்டச்சு செய்ய வேண்டும் இங்கே பிரதானமாக பயன்படுத்தப்படும் வெளியீட்டு, உள்ளிட்டு சாதனங்கள் முறையே?

1. ஒலிவாங்கி, சுட்டி
2. விசைப்பலகை, நுணுக்குப்பன்னி
3. ஒலிபெருக்கி,விசைப்பலகை
4. விசைப்பலகை,சுட்டி

04) பின்வருவனவற்றுள் சொல்முறைவழிபடுத்தல் மென்பொருள் அல்லாதததது எது

1. Ms Word
2. Abi Word
3. LYX
4. HTML

05) பின்வருவற்றுள் எதை ஒரு உள்ளீடு மற்றும் வெளியீடு சாதனமாக கருத **முடியாது**?

1. தொடுதிரை
2. தலையணை கேட்பொறி
3. மொடம்
4. தொடுதிட்டு

Past Papers Wiki

06) அருகில் தரப்பட்டுள்ள கணினி ஒன்றின் சில விபரங்களை உள்ளடக்கிய விபரக்கூற்றினை கருதுக. இக்கணினியில் பொருத்தப்பட்டிருக்கின்ற பிரதான நினைவகத்தின் கொள்ளளவு யாது?

Current Date/Time:	Friday, April 19, 2024, 10:11:36 AM
Computer Name:	DESKTOP-49DCBO4
Operating System:	Windows 10 Pro 64-bit (10.0, Build 19044)
Language:	English (Regional Setting: English)
Processor:	n/a (4 CPUs)
Memory:	8192MB RAM
Page file:	4843MB used, 4245MB available

1. 4843 MB
2. 2^{13}MB
3. 8X2^{10} KB
4. 8X1024GB

07) பின்வருவனவற்றுள் முதன்மை நினைவகம் எது?

1. வன்வட்டு
2. பதுக்குநினைவகம்
3. இறுவட்டு
4. மாயநினைவகம்

08) சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளில் பொதுவாக பயன்படுத்தப்படும் குறுக்குவழிச்சாவிகள் (Sorthcut keys) தொடர்பான கூற்றுக்களை கருத்துக.

A- ஆவணத்தை திறப்பதற்கு Ctrl + N பயன்படுத்தப்படும்

B- ஆவணத்தை சேமிப்பதற்கு Ctrl + S பயன்படுத்தப்படும்

C- ஏற்கனவே நகல் செய்த பாடங்களையும் (text) இலக்கு பொருட்களையும்(objects) ஒட்டுவதற்கு (paste) Ctrl + V பயன்படுத்தப்படும்

மேற்குறித்த கூற்றுகளில் சரியானவை

1. A,B மாத்திரம்
2. B,C மாத்திரம்
3. B மாத்திரம்
4. A,B,C எல்லாம்

09) சொல்முறை வழிப்படுத்தல் ஆவணமொன்றில் “X^2” எனும் படவுரு பயன்படுத்தப்படுவது

1. எழுத்தின் அளவை சிறிதாக்கல் (Reduce font size)
2. உள்தள்ளுதல் (Indentation)
3. மேல் ஒட்டு இடுதல் (Superscript)
4. கீழ் ஒட்டு இடுதல் (Subscript)

10) சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளில் ஒரு ஆவணத்தை புதிய பெயரில் சேமிக்க பயன்படுத்தப்படுவது

1. Save as
2. Save
3. Open
4. Print

11) சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளில் நிகண்டு (Thesaurus)இன் பயன்பாடு யாது?

1. சரிபார்க்காத சொற்களை அழிப்பதற்கு
2. சொற்களின் அதே பொருள் கொண்ட மாற்றுச் சொற்களை வழங்குவதற்கு
3. ஆவணத்தை மூடுவதற்கு
4. பக்க அமைப்பை மாற்றுவதற்கு

12) பின்வரும் சாதனங்களைக் கருதுக.

A - இறுவட்டு B – வன்வட்டு C – நெகிழ்வட்டு

இவற்றுள் காந்த சேமிப்பு சாதனங்கள் எது/எவை?

1. A மாத்திரம்
2. B மாத்திரம்
3. B, C மாத்திரம்
4. A,B மாத்திரம்

13) இலத்திரனியல் நிகழ்த்துகை மென்பொருளில் புதிய படவில்லை ஒன்றை சேர்ப்பதற்கு பயன்படுத்தப்படும் குறுக்குவழிச்சாவி எது

1. Ctrl + P
2. Ctrl + N
3. Ctrl + M
4. Ctrl + S

14) இலத்திரனியல் நிகழ்த்துகை மென்பொருளில் முழுமையான படவில்லை பார்வை (slide show) என்பது எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது

1. படவில்லைகளை அச்சிடல்
2. படவில்லைகளை முன்வைப்புச் செய்வதற்கு
3. புதிய படவில்லையை சேர்ப்பதற்கு
4. படவில்லையை ஒழுங்கமைப்பதற்கு

15) 173_{10} எனும் பதின்ம எண்ணிற்குச் சமனான இரும எண் (Binary Number) யாது?

1. 10101111_2
2. 10101101_2
3. 10101010_2
4. 11011010_2

16) 514_8 எனும் எண்ணிற்குச் சமவலுவான எண் யாது?

1. 91_{10}
2. 1000000110_2
3. $14C_{16}$
4. $E10_{16}$

17) EBCDIC குறிமுறையின் அடிப்படையில் சில ஆங்கில எழுத்துக்களின் பதின்மப் பெறுமானங்களும், ஆங்கில எழுத்துக்களின் இருமப் பெறுமானங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

C – 195	I - 11001001	T – 227	i - 137	c – 10000011	t - 163

மேலுள்ள பதின்ம, இரும பெறுமானங்களின் அடிப்படையில் **"Ict"** எனும் சொல்லின் EBCDIC குறிமுறையாக அமைவது பின்வருவனவற்றில் எது?

1. 110010011100000111111100011
2. 110010011000001110100010
3. 110010011000001110100011
4. 1100100110000011

*** கீழே தரப்பட்ட தருக்கச்சுற்றினை அடிப்படையாக கொண்டு வினாக்கள் 18, 19 மற்றும் 20 இற்கு விடை தருக.**

தருக்கச் சுற்றினுடைய உள்ளீடுகள் A,B மற்றும் வெளியீடு F ஆகும்.



18) வெளியீடு F இற்கான பூலியன் கோவையாக அமைவது எது?

1. $F = A + B$
2. $F = A.B$
3. $F = \bar{A} + B$
4. $F = \bar{\bar{A}} + B$

19) வெளியீடு F ஆனது 0 ஆக இருப்பதற்கு உள்ளீடுகள் A, B இற்கு கொடுக்கப்பட வேண்டிய பெறுமானங்கள் முறையே

1. 1, 1
2. 1, 0
3. 0, 1
4. 0, 0

20) தருக்கச்சுற்று தொடர்பான பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

கூற்று I → B=1 ஆகும் போது வெளியீடு எப்பொழுதும் 1 ஆகும்

கூற்று II → A=0 ஆகும் போது வெளியீடு எப்பொழுதும் 1 ஆகும்

கூற்று III → A=1, B=0 ஆகும் போது வெளியீடு எப்பொழுதும் 1 ஆகும்

மேலே உள்ள கூற்றுக்களில் சரியானது எது?

1. கூற்று I மற்றும் கூற்று II
2. கூற்று II மற்றும் கூற்று III
3. கூற்று I மற்றும் கூற்று III
4. எல்லாம் சரி

21) பின்வருவனவற்றில் இலத்திரனியல் தரவுத்தள மென்பொருளுக்கு உதாரணமாக அமைவது எது?

1. Ms Word
2. Power point
3. Numbers
4. MySQL

*** கீழே தரப்பட்டுள்ள விரிவுரையாளர் அட்டவணையை பயன்படுத்தி வினாக்கள் 22, 23, மற்றும் 24 இற்கு விடையளிக்குக.**

விரிவுரையாளர் அட்டவணை(Lecture Table)

L_Index	L_Name	L_Subjects
001	Amal	Maths
002	Nimali	ICT
003	Saran	English
004	Raji	Tamil

22) விரிவுரையாளர் அட்டவணையில் காணப்படும் முதன்மைச் சாவிப்புலமாக கருதப்படுவது எது/எவை?

1. L_Index
2. L_Name
3. L_Subjects + L_Index
4. L_Name + L_Index

23) விரிவுரையாளர் அட்டவணையில் காணப்படும் புலங்கள் மற்றும் பதிவுகளின் எண்ணிக்கைகள் முறையே

1. 3,3
2. 4,3
3. 2,3
4. 3,4

24) விரிவுரையாளர் அட்டவணையில் காணப்படும் L_Name புலத்திற்கு பயன்படுத்தப்படும் தரவுவகை யாது?

1. Text
2. Number
3. Date & Time
4. Currency

25) பின்வருவனவற்றுள் எது ஓர் வழிப்படுத்தப்பட்ட ஊடகமாகும்?

1. வானொலி அலை
2. நுண்ணலை
3. செங்கீழ்க்கதிர்
4. முறுக்கிணை வடம்

26) 173_8 எனும் எண்ம எண்ணிற்குச் சமனான பதின்ம எண் (Decimal Number) யாது?

1. 124
2. 123
3. 125
4. 120

27) 100101001_2 எனும் எண்ணிற்குச் சமவலுவான எண் யாது?

1. 129_{10}
2. 129_{16}
3. 295_{10}
4. 107_8

28) 10011001_2, 115_8, 160_{10}, $1C_{16}$ ஆகிய இலக்கங்களில் இறங்குவரிசை முறையே,

1. $1C_{16}$, 115_8, 10011001_2, 160_{10}
2. 160_{10}, 10011001_2, 115_8, $1C_{16}$
3. 10011001_2, 115_8, $1C_{16}$, 160_{10}
4. $1C_{16}$, 10011001_2, 115_8, 16010

29) 673_8+ 10011000_2 இதற்குச் சமவலுவான எண் யாது?

1. 103_8
2. 253_{16}
3. 663_{10}
4. 11011101_2

30) சரணியா பேனை ஒன்றினை வாங்குவதற்காக அவனது அண்ணாவிடமிருந்து Rs.50/= யும் அம்மாவிடமிருந்து Rs.35/= யும் பெற்றுக்கொண்டார். சரணியா பெற்றுக்கொண்ட மொத்தப் பணத்தின் பெறுமதி யாது?

1. 10101010_2
2. 56_{16}
3. 225_8
4. 125_8

Past Papers Wiki

31) ASCII குறிமுறையில் B இன் இருமப் பெறுமதி 1000010_2 ஆகும். ASCII குறிமுறையில் A,D முறையே வகைகுறிக்கும் இருமப் பெறுமதி யாது?

1. 1000100_2 உம் 1000001_2
2. 1000001_2 உம் 1001000_2
3. 1000001_2 உம் 1000100_2
4. 1001001_2 உம் 1100001_2

32) 657_8 எனும் எண்ம எண்ணை இரும எண்ணில் வகைகுறிக்கும் போது எத்தனை பிற்றுகள்(Bits) காணப்படும்?

1. 12
2. 16
3. 8
4. 9

33) கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் சரியானது எது?

A) தரவுகளும் அறிவுறுத்தல்களும் கணினியில் இரும வடிவில் சேமிக்கப்பட்டிருக்கும்

B) BCD குறிமுறையானது 6 பிற்றுக்களினால்(Bits) வகைகுறிக்கப்படும்.

C) $3AC_{16}$ இற்குச் சமனானது 001110101100_2 ஆகும்.

1. A மட்டும் சரி
2. B,C மட்டும் சரி
3. A,C மட்டும் சரி
4. A,B,C எல்லாம் சரி

34) பின்வருவனவற்றுள் விரிதாள் மென்பொருளின் கோப்பு நீட்சியாக கருதப்படுவது எது?

1. .docx
2. .xlsx
3. .txt
4. .pptx

35) பின்வருவனவற்றுள் வலிதற்ற கலமுகவரியாக காணப்படுவது எது?

1. A100
2. A$50
3. H200
4. $A50$

36) பின்வருவனவற்றுள் சரியான சார்பாக கருதமுடியாதது எது?.

1. =SUM(A1,B1,C6)
2. =AVG (A1:B6)
3. =MAX(A1:B6,C8)
4. =MIN(A1,B6:D12)

37) =2^3/(5-1 ^3)*5 எனும் சூத்திரத்தின் வருவிளைவாக காணப்படுவது எது?

1. 160
2. 150
3. 10
4. 15

38) மாதாந்த வருமானத்தினை சதவீதமாக காட்டுவதற்கு பொருத்தமான வரைபு வகை யாது?

1. சலாகை வரைபு
2. வட்ட வரைபு
3. XY சிதறல் வரைபு
4. கோட்டு வரைபு

39) கலம் D3 இல் =A3/B2*(D2-B1) எனும் சூத்திரமானது தட்டச்சு செய்யப்படின் பெறப்படும் வருவிளைவாக காணப்படுவது.

	A	B	C	D
1	5	6	8	15
2	9	7	11	20
3	10	8	14	

1. 30
2. 20.2
3. 20
4. 24

40) தொடர்பு நிலைத் தரவுத்தளத்தில் உள்ள அந்நியச் சாவி தொடர்பான பின்வரும் கூற்றுக்களை கருதுக.

A. ஓர் அட்டவணையில் உள்ள அந்நியச் சாவியானது இன்னோர் அட்டவனையிலே முதல்நிலைச் சாவியாகக் காணப்படமாட்டாது.

B. இரு அட்டவணைகளுக்கு இடையில் தொடர்பை உருவாக்குதல்

C. தொடர்புபட்ட அட்டவணைகளிலே முதல்நிலைச் சாவியைக் கொண்ட புலத்துடன் தொடர்புடைய தரவுகள் மாத்திரமே காணப்பட முடியும்

மேலே உள்ள கூற்றுக்களில் சரியானது எது/எவை?

1. A உம் B உம்
2. A உம் C உம்
3. B உம் C உம்
4. A, B, C எல்லாம்

பகுதி - II

கவனிக்க:

*** முதலாம் வினாவிற்கும் வேறு நான்கு வினாக்கள் உட்பட மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

*** முதலாம் வினாவிற்கு 20 புள்ளிகளும் ஏனைய வினாக்களுக்கு 10 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்**

01)

i. மாணவன் ஒருவன் தரம் 10 ICT பாட புத்தகத்தை பதிவிறக்கம் செய்வதற்காக www.edupub.lk எனும் வலைத்தளத்தினுள் பிரவேசித்தான். இது எவ்வகையான தரவு ஊடுகடத்தல் முறையாகும்?

ii. திடநிலை தேக்கச் சாதனங்கள் உதாரணம் இரண்டு தருக.

iii. சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளில் உள்ள பின்வரும் உருக்களின் கொள்பணி (task) யாது?

a) .... b) ....



iv. மேலே தரப்பட்ட தர்க்கச் சுற்றின் உள்ளீடு A=0 ஆகவும் வெளியீடு Z=1 ஆகவும் இருப்பின் உள்ளீடுகள் B,C இன் பெறுமானம் யாது?

v. 305 எனும் பதின்ம எண்ணிற்குரிய BCD குறிமுறை யாது?

vi. தரப்பட்ட விரிதாளில் A1, B1 ஆகிய கலங்கள் முறையே 30, 20 எனும் பெறுமானங்கள் உள்ளன. கலம் C1 இல் =A$1+B$1 நுளைவு செய்யப்பட்ட பின்னர் அது கலம் C1 இல் பெறுமானம் 50 ஐ காட்சிப்படுத்துகிறது. கலம் C1 இல் உள்ள சூத்திரமானது கலம் C2 மற்றும் D1 இல் பிரதி செய்யப்பட்டால் அவற்றில் உள்ள பெறுமானம் யாது?



vii. கணினி வன்பொருள் முகாமை தொடர்பாக பணிசெயல் முறைமையினால் ஆற்றப்படும் பணிகள் இரண்டு தருக?

viii. a) இலத்திரனியல் நிகழ்த்துகையிலே, நிகழ்த்துகையினை பார்வையாளருக்கு முன்வைக்கப் பயன்படுத்தப்படும் காட்சித் தத்தல் (View Tab) எது?

b) பகுதி (a) இல் குறிப்பிட்ட காட்சித் தத்தலில் இருக்கும் போது அதனை பார்வையாளரிடம் இருந்து மறைப்பதற்கு பயன்படுத்தக் கூடிய விசைப்பலகை எழுத்து யாது?

ix. முதன்மைச் சாவியின் விசேட அம்சங்கள் இரண்டு தருக.

x. முறைமை மென்பொருளினுள் அடங்குபவை 2 தருக?

02) ABC நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களிற்கான தை மாதத்திற்கான சம்பளப்பட்டியல் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

	A	B	C	D	E	F	G
1	**சம்பளப்பட்டியல்**						
2	தை மாதம்						
3	ஒரு கிழமைக்கான சாதாரண வேலை மணித்தியாலம்					**30**	
4	ஊழியர் இல	பெயர்	வேலை செய்த மணித்தியாலம்	சாதாரண வேலைக் கொடுப்பனவு (மணிக்கானது)	மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு (மணிக்கானது)	மேலதிக வேலை மணித்தியாலம்	மொத்தக் கொடுப்பனவு
5	A001	விமல்	40	250	500	10	12500.00
6	B001	ராஜா	30	250	500	0	7500.00
7	C001	குமார்	35	350	700	5	14000.00
8	D001	ரவி	38	200	400	8	9200.00
9	E001	கஜன்	37	250	500	7	11000.00
10	F001	ரதி	40	450	900	10	22500.00
11	G001	மாலா	43	250	500	13	14000.00
12			**வழங்கப்பட்ட மொத்தக்கொடுப்பனவு**				**90700.00**

மேலே தரப்பட்ட மின்னணு விரிதாளினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களிற்கு விடையளிக்க.

i. “சம்பளப்பட்டியல்” எனும் தலைப்பினை வடிவமைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட கருவிகள் எவை?

ii. விமலினால் செய்யப்பட்ட மேலதிக வேலை மணித்தியாலத்தை கணிப்பிடுவதற்கு கலம் F5 ல் எழுதப்பட வேண்டிய சூத்திரம் யாது? **(இச் சூத்திரமானது ஏனைய கலங்களிற்கும் பிரதி செய்யப்படவேண்டும்.)**

iii. மேலதிக நேர ஒரு மணித்தியால கொடுப்பனவை காண்பதற்கு கலம் E5 ல் எழுதப்பட வேண்டிய சூத்திரம் யாது? **(மேலதிக ஒரு மணித்தியால கொடுப்பனவானது சாதாரண ஒரு மணித்தியால கொடுப்பனவின் இரு மடங்காகும்.)**

iv. விமலின் மொத்த கொடுப்பனவை காண்பதற்கு கலம் G5 இல் எழுதப்பட வேண்டிய சூத்திரம் யாது? **(மொத்த கொடுப்பனவானது சாதாரண மற்றும் மேலதிக கொடுப்பனவையும் சேர்த்து வழங்கப்படும்.)**

v. வழங்கப்பட்ட மொத்தக் கொடுப்பனவை காண்பதற்கு கலம் G12 ல் எழுதப்படவேண்டிய சார்பு யாது?

03)

i. பின்வரும் அட்டவணையானது பயன்பாட்டு மென்பொருட்களையும் அவற்றின் தொழிற்பாடுகளையும் கொண்டுள்ளது. அட்டவணை A இல் உள்ள பயன்பாட்டு மென்பொருட்களுக்குரிய தொழிற்பாடுகளை அட்டவணை B இல் இருந்து தெரிந்தெடுத்து எழுதுக **(முகப்படையாளங்களை குறிப்பிடுவது போதுமானது)**

அட்டவணை A	**அட்டவணை B**
A – வட்டு ஒருங்கமைத்தல் (Disk Defragmentation)	P – பிறள் பொருட்களிலிருந்து கணினியினைப் பாதுகாத்தல்
B – முறைமை வழுக்களை கண்டறியும் கருவி (System diagnosis tool)	Q – வன்வட்டை பல தருக்க செலுத்திகளாக பிரித்தல்
C - நச்சுநிரல் எதிர்ப்பு மென்பொருள் (Anti-virus software)	R – வன்வட்டிலுள்ள வெறுமையான சிறிய பிரதேசங்களை ஒன்று சேர்த்தல்
D – வட்டு பிரிவிடல் (Disk Partitioning)	S – கணினி / கணினி வலையமைப்பில் உள்ள வன்பொருட்களின் குறைபாடுகளை இனம் காணல்

ii. கணினியில் பயன்படுத்தப்படும் கோப்பு முறைகள் இரண்டு தருக?

iii. வரைவியல் பயனர் இடைமுகத்தின் கூறுகளைத் தருக?

iv. வட்டுப் பிரிவிடலின் அவசியம் 2 தருக?

v. பணிசெயல் முறைமையை அவற்றின் தொழிற்பாடுகளுக்கு அமைய எவ்வாறு வகைப்படுத்தலாம்?

04)

i. பின்வரும் எண்களை பதின்ம எண்ணாக மாற்றுக உமது கணித்தலுக்கான முக்கிய படிமுறைகளை தருக.

a) 111010101_2 b) $A07_{16}$

ii. கீழே தரப்பட்ட எண்களின் MSD மற்றும் LSD ஐ எழுதுக.

a) 7850 b) 0.00340

iii. பின்வரும் பூலியன் கோவைக்கான தருக்கச் சுற்றை அடிப்படைத் தருக்க வாயில்களை மாத்திரம் பயன்படுத்தி வரைக.

a) $Z = \bar{X}Y + X\bar{Y}$

b) $F = ABC + A\bar{B}C + \overline{AC}$

iv. வலையமைப்பாக்கத்தின் பிரதிகூலங்கள் இரண்டு தருக.

v. ஆளிக்கும்(Switch) குவியத்திற்குமான(Hub) வேறுபாடுகள் இரண்டு தருக.

05) பாடசாலை ஒன்றில் மாணவர் விபரம் மற்றும் அவர்களுடைய பெறுபேறு தொடர்பான கீழே உள்ள தொடர்புநிலைத் தரவுத்தள அட்டவணைகளை கருதுக.

Student Table

Stu_ID	Name	DOB	Grade
S001	Ramanan	2010/03/20	10
S002	Kumaran	2009/11/14	11
S003	Rajkumar	2010/05/25	10
S004	Sunil	2009/04/23	11

Result Table

Stu_ID	L_Code	Result
S001	L01	A
S002	L02	B
S004	L01	B
S003	L04	A
S002	L03	C

Language Table

L_Code	Language
L01	Tamil
L02	English
L03	Franch
L04	Sinhala

i. அட்டவணைகளில் காணப்படும் இரண்டு முதன்மை சாவிகளை அவற்றின் அட்டவணைப் பெயருடன் எழுதுக?

ii. அட்டவணைகளில் காணப்படும் இரண்டு அந்நியச் சாவிகளை அவற்றின் அட்டவணைப் பெயருடன் எழுதுக?

iii. 2011 ஆம் அண்டு வைகாசி மாதம் 10 ஆம் திகதி பிறந்த Ravi (Stu_ID:S006) எனும் மாணவன் தரம் 9 இல் இப்பாடசாலையில் சேர்ந்தார்

a) இப் பதிவை இற்றைப்படுத்தப்பட வேண்டிய அட்டவணை/அட்டவணைகள் எது/எவை?

b) அட்டவணையில் இற்றைப்படுத்தபட வேண்டிய தரவுகளை அட்டவணை பெயர் (புலம் 1 , புலம் 2 ,…) எனும் வடிவில் தருக.

iv. குமரன் எனும் மாணவன் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட சீன மொழியினைக் கற்று அதில் A பெறுபேற்றை பெற்றுள்ளார்.

a) இப் பதிவை இற்றைப்படுத்தப்பட வேண்டிய அட்டவணை/அட்டவணைகள் எது/எவை?

b) அட்டவணையில் இற்றைப்படுத்தபட வேண்டிய தரவுகளை அட்டவணை பெயர் (புலம் 1 , புலம் 2 ,…) எனும் வடிவில் தருக.

Past Papers Wiki

v. மாணவர் அட்டவணைக்கும் (Student table) மொழி அட்டவணைக்கும் (Language Table) இடையில் காணப்படும் தொடர்புமை(relationship) யாது?

06) ஒரு சொல்முறைவழிப்படுத்தி மென்பொருளின் இலக்கமிடப்பட்ட இடைமுகத்தையும் (உரு – 1) இம் மென்பொருளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட ஆவணத்தையும் (உரு – 2) கீழேயுள்ள உருக்கள் காட்டகின்றது.



உரு - 1



History of Computers

Englishman, Charles Babbage, invented in the 1830's a "Difference Engine" made out of brass and pewter rods and gears, and also designed a further device which he called an "*Analytical Engine*". His design contained the five key characteristics of modern computers:-

1. An input device
2. Storage for numbers waiting to be processed
3. A processor or number calculator
4. A unit to control the task and the sequence of its calculations
5. An output device

உரு - 2

i. 1 தொடக்கம் 4 வரையான ஒவ்வொரு வடிவமைத்தல் பணிக்கும் பயன்படும் கருவி/கருவிகளின் முகப்படையாளங்களை எண்களிற்கு எதிரே எழுதுக.

ii. பின்வரும் ஒவ்வொன்றிற்கும் 'நிரல்திசை' (portrait), 'நிரைத்திசை' (Landscape) நிலைத் தோற்றங்களில் எது உகந்தது?

a) ஒரு உத்தியோகபூர்வக் கடிதத்திற்கு,

b) ஓர் அகன்ற அட்டவணையைக் கொண்ட ஒரு பக்கத்திற்கு

iii. சொல்முறைவழிப்படுத்தி மென்பொருளில் உள்ள ‘அஞ்சல் ஒன்றிணைப்பு’ (mail merge) வசதியின் நன்மை யாது?

iv. இலத்திரனியல் நிகழ்த்துகை மென்பொருளில் அசைவூட்டம் (Animation), நிலைமாறல் (Transition) என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை விளக்குக

v. இலத்திரனியல் நிகழ்த்துகை மென்பொருளில் படவில்லை வரிசைப்படுத்தல் பார்வை (Slide sorter view) இன் பயன்பாடு யாது?

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library